கும்பகோணத்தை அடுத்துள்ள கோவிலாச்சேரியில் அமைந்துள்ள அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தமிழ்த்துறையின் சார்பில் ஒருநாள் யோகா பயிலரங்கம் நடைபெற்றது. இப்பயிலரங்கத்திற்கு அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி **முதல்வர் முனைவர் எஸ்.பி.மாணிக்கவாசுகி** அவர்கள் கலந்து கொண்டு தலைமை வகித்தார். தமிழ்த்துறைத் **தலைவர் ஜே.லொயோலாபீரிஸ்** அவர்கள் வாவேற்றுப் பேசினார். இப்பயிலரங்கத்திற்கு சிறப்பு விருந்தினராக யோகா பயிற்சியாளர் **திரு. கணேசன்** அவர்கள் கலந்து கொண்டு யோகாவின் மூலம் மூச்சுப் பயிற்சி மற்றும், ஆசனங்கள், யோக நித்திரைகள் போன்றவற்றை செயல்முறை விளக்கப் பயிற்சியின் மூலம் செய்து காண்பித்தார். மாணவர்களுக்கு பயனுள்ள முறையில் இருந்தது. நிகழ்ச்சியின் இறுதியாக **பேரா.சோமசுந்தரம்** நன்றி கூறினார். நிகழ்ச்சி ஏற்பாடுகளை தமிழ்த்துறை பேராசிரியர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

